2013 ஏப்ரல் 16]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கேள்விதான் கேட்க வேண்டும். இதையெல்லாம் பேசக்கூடாது. ஆகவே, அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள், அவ்வளவுதான். (குறுக்கீடு)

வினா வரிசை எண் 238, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ராஜநாயகம், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) திரு. எல். வெங்கடேசன், இருக்கையில் அமர்ந்துகொண்டு இதுமாதிரியெல்லாம் பேசக்கூடாது. உட்காருங்கள்.

238—

வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம்

***19871—திரு. மு. ராஜநாயகம்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறந்தாங்கி தொகுதி, அறந்தாங்கி மற்றும் ஆவுடையார்கோவிலில் புதிய வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரண்டு கேள்விகளை முன்வைத்திருக்கிறார்கள். புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதி, அறந்தாங்கி வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் பழைய கட்டடத்திற்குப் பதிலாக புதிய கட்டடம் கட்ட சம்பந்தப்பட்ட பொதுப் பணித் துறையினுடைய தோராய மதிப்பீட்டு அறிக்கையை தலைமைப் பொறியாளரின் ஒப்புதலைப் பெற்று அனுப்பிவைக்குமாறு புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்கள். மதிப்பீட்டு அறிக்கை பெறப்பட்டவுடன், புதிய கட்டடம் கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2013 ஏப்ரல் 16

ஆவுடையார்கோவில் வட்டாட்சியர் அலுவலகம் கட்டுவது குறித்த முன்மொழிவுகள் எதுவும் தற்போது பெறப்படவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ராஜநாயகம் அவர்கள்.

திரு. மு. ராஜநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோடானுகோடி இதயங்களில் குடிகொண்டிருக்கும் தங்கத் தாரகை, உலகத் தமிழர்களினுடைய ஒப்பற்ற தலைவி, சித்திரைக்கு முத்திரை பதித்த சிங்கநிகர் தலைவி, (மேசையைத் தட்டும் ஒலி) நாளைய பாரதத்தின் நம்பிக்கை நட்சத்திரம், (மேசையைத் தட்டும் ஒலி) என் குடும்பத்தின் குல தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்குகிறேன்.

முற்பகல் 11—15

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நல்லாட்சி பொறுப்பேற்றவுடன் இன்றைக்கு அனைத்துத் துறைகளும் சிறப்புடன் இயங்கிக் கொண்டிருக்கும் இந்த நல்ல தருணத்திலே வருவாய்த் துறையின் மூலமாக மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற வகையிலே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாட்சியிலே மக்களை நாடிச் செல்கின்ற 'அம்மா திட்டம்', என்ற ஒரு சிறப்பான திட்டம் இயங்கிக் கொண்டிருக்கும் இந்த நல்ல தருணத்திலே (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாசிபெற்ற அறந்தாங்கி தொகுதியில் அறந்தாங்கி மற்றும் ஆவுடையார்கோவில் வட்டாட்சியர் அலுவலகம் மிகவும் பழமை வாய்ந்ததாகவும், அங்கு மக்கள் பணி செய்வதற்கு அரசு அலுவலர்களுக்குப் போதிய இட வசதி இல்லாமலும் உள்ளது. இந்த நிதியாண்டிலே மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாட்சியிலே ஆவுடையார்கோவில் வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடத்தை அமைத்துத்தர மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களைத் தொட்டு வணங்கி, வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை மீண்டும் வணங்கி இந்த நல்லாட்சியிலேயே

அந்தப் புதிய கட்டடத்தை அமைத்துத்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று தங்கள்வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 239, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கோபால்சாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

239—

மின்னாக்கி வசதி

***14392—திரு. க. கோபால்சாமி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விருதுநகர் மாவட்டம், ராஜபாளையம் அரசு பொது மருத்துவமனையில் மின்னாக்கி வசதி செய்து, தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

விருதுநகர் மாவட்டம், ராஜபாளையம் அரசு பொது மருத்துவமனையில் தற்போது 4 ஜெனரேட்டர்கள் செயல்பாட்டில் உள்ளன. இவை மருத்துவமனையின் தற்போதைய அவசர மின் தேவைகளைப் பூர்த்தி செய்யப் போதுமானதாக உள்ளன. ராஜபாளையம் அரசு மருத்துவமனை பல்வேறு வசதிகள் கொண்ட வட்ட மருத்துவமனையாகச் செயல்பட்டு வருகிறது. வட்ட மருத்துவமனையை மாவட்ட தலைமை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தலாம். ஆனால் விருதுநகர் மாவட்டத்தில் விருதுநகர் மாவட்ட தலைமை மருத்துவமனை செயல்பாட்டில் உள்ளதால் ராஜபாளையம் வட்ட மருத்துவமனையை மாவட்ட தலைமை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த இயலாத நிலை உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கோபால்சாமி அவர்கள்.*